(3) சிறிய அளவில் ஏலச்செடி வளர்ப்பவர்களுக்கு நிதி உதவி கொடுக்கும் திட்டம்.

(4) தவணை முறையில் வாங்கும் நிபந்தனையின்கீழ் தூவும் பாசன தளவாடங்களை வழங்குவதற்கான திட்டம்.

(5) ஏலத்தொழிலின் மறுவாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஒரு ஆராய்ச்சித்துறை அமைப்பதற்கான திட்டம்.

திருமதி ஜோதி வெங்கடாசலம் : தலைவர் அவர்களே, தமிழ் நாடு பூராவிலும் இருக்கக்கூடிய ஏலத்தோட்டங்கள் எத்தனை? அவற்றில் 326 தான் பதிவாகியிருப்பதாக சொன்னார்கள். இன்னும் எத்தனை பதிவு செய்யப் படவேண்டியிருக்கிறது.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மொத்தம் 817 என்றும், அதில் 326 பதிவு செய்யப்பட்டிருக்கிறது என்றும் சொன்னேன். பதிவு செய்ய தனி அலுவலர் வேண்டும் என்று கேட்டார்கள். அதைப் போர்டே ஒப்புக்கொள்ள வேண்டும் என்றும் சொல்லி, இப்பொழுது அவர்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். புதிய அலுவலர் நியமிக்கப் பட்டிருக்கிறார்.

திரு. ஜே. ஜேம்ஸ் : தலைவர் அவர்களே, நமது மாநிலத்தில் உற்பத்தியாகும் ஏலக்காய் எந்த, எந்த வெளி நாடுகளுக்கு அனுப்பப்படுகிறது. அதன் மூலம் நமக்குக் கிடைக்கும் வருவாய் எத்தனை என்பதைத் தெரிவிக்க முடியுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அந்தத் தகவல் என்னிடத்தில் இல்லை.

* 321 Q.—THIRU N. DENNIS : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the time-limit for the registration of owners under the Cardamom plants, has been extended from time to time; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) 1971 டிசம்பர் 31-ம் தேதி வரை கால வரையறை நீட்டப் பட்டுள்ளது.

திருமதி அ. ந. அனந்தநாயகி : சார், உலகச் சந்தையில் ஏலத்தின் விலை சரிந்துவிட்டதாகச் சொல்லப் படுகிறதே. அதைக் குறித்து அந்தத் தொழிலுக்கு புனர்வாழ்வு அளிக்க என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : மத்திய சர்க்கார் அதற்குத் தக்க நடவடிக்கை எடுப்பார்கள்.

Copper Mines.

* 322 Q.—THIRU R. R. MUNUSAMW : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether it is a fact that Copper Mines are functioning in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. ரா. ரா. முனுசாமி : தலைவர் அவர்களே, நாம் ஆராய்ச்சி நடத்தாவிட்டாலும், வேறு மாநிலத்தில் நடத்தப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக, செம்பு எடுக்கப்படுமா என்பதை அறியலாமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : காப்பர் தனியாக எடுக்கப் படுவதில்லை copper sulphides of lead, zinc, nickel, molybdenum, etc. இவைகளோடு கிடைக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில், மாமண்டூர் பகுதியில் 0.63 சதவிதம் காப்பர் உள்ள பொருள் கிடைப்பதாகக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. பொருளாதார அளவில் அதை எடுக்கமுடியுமா என்பது பரிசிலனையில் இருக்கிறது.

Closed Mills.

* 323 Q.—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether the Government have taken steps to reopen the closed textile mills at Coimbatore; and

(b) if so, the details of the same?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) தொழில்கள் (வளர்ச்சி முறைப்படுத்துதல்) சட்டத்தின் கீழ் ஆய்வுக் குழுக்கள் அமைக்குமாறு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. மத்திய அரசின் முடிவு இன்னும் தெரியவில்லை.

திரு. கே. டி. கே. தங்கமணி : ஏற்கனவே கோவையில் முருகன் மில் திறக்கவும், நகரத்திலுள்ள பங்கஜா மில் போன்ற மூன்று மில்கள் சீக்கிரத்தில் திறக்கப்படும் என்ற வாக்குறுதி கொடுக்கப் பட்டதே. அதை துரிதப்படுத்த படிப்படியாக ஒவ்வொரு மில்லாகவாவது திறக்கப்படும் என்ற ஒரு முடிவை அரசு எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இதிலே இரண்டு ஆலைகள் நீதி மன்றத்தில் இருக்கின்றன. முயற்சிகள் எடுக்கப்பட்டிருக்